صيام رمضان

# ரமழானில் நோன்பு வைத்தல்

1- فرض الصيام و فضله

## நோன்பின் சிறப்பும் அதன் கடமையும்

 عن أبي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ اللَّهُ كُلُّ عَمَلِ ابْنِ آدَمَ لَهُ إِلَّا الصِّيَامَ فَإِنَّهُ لِي وَأَنَا أَجْزِي بِهِ وَالصِّيَامُ جُنَّةٌ وَإِذَا كَانَ يَوْمُ صَوْمِ أَحَدِكُمْ فَلَا يَرْفُثْ وَلَا يَصْخَبْ فَإِنْ سَابَّهُ أَحَدٌ أَوْ قَاتَلَهُ فَلْيَقُلْ إِنِّي امْرُؤٌ صَائِمٌ وَالَّذِي نَفْسُ مُحَمَّدٍ بِيَدِهِ لَخُلُوفُ فَمِ الصَّائِمِ أَطْيَبُ عِنْدَ اللَّهِ مِنْ رِيحِ الْمِسْكِ لِلصَّائِمِ فَرْحَتَانِ يَفْرَحُهُمَا إِذَا أَفْطَرَ فَرِحَ وَإِذَا لَقِيَ رَبَّهُ فَرِحَ بِصَوْمِهِ

**அபூஹுரைரா (ரலி)- நபி (ஸல்)- அல்லாஹ் கூறினான் - ஆதமுடைய மகனின் அனைத்து செயல்களும் அவனுக்குரியது நோன்பைத்தவிர அது எனக்குரியது; அதற்கு நானே கூலி வழங்குவேன். நோன்பு என்பது ஒரு கேடயம். உங்களிலொருவர் நோன்பாளியாக இருந்தால் அவர் மோசமான வார்த்தைகளை பேசவேண்டாம், சப்தமிட்டு பேச வேண்டாம், எவரேனும் அவரிடம் சண்டையிட்டால் "நான் நோன்பாளி என்று கூறட்டும்". முஹம்மதுடைய உயிர் எவனுடைய கையிலிருக்கிறதோ அவன் மீது சத்தியமாக நோன்பாளியின் வாயிலிருந்து வரும் வாடை அல்லாஹ்விடத்தில் கஸ்தூரியை விட சிறந்ததாகும். ஒரு நோன்பாளிக்கு இரண்டு சந்தோஷங்கள் உண்டு - நோன்பு திறக்கும் வேலையில் உள்ள சந்தோஷம், இறைவனை சந்திக்கும் நேரத்தில் உள்ள சந்தோஷம்.**

 عَنْ سَهْلِ بْنِ سَعْدٍ ، قَالَ : قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : " إِنَّ فِي الْجَنَّةِ بَابًا يُقَالُ لَهُ الرَّيَّانُ ، يَدْخُلُونَ مِنْهُ الصَّائِمُونَ يَوْمَ الْقِيَامَةِ ، لا يَدْخُلُ مَعَهُمْ أَحَدٌ غَيْرُهُمْ ، يُقَالُ : أَيْنَ الصَّائِمُونَ ؟ فَيَقُومُونَ ، فَيَدْخُلُونَ مِنْهُ ، فَإِذَا دَخَلَ آخِرُهُمْ ، أُغْلِقَ فَلَمْ يَدْخُلْ مِنْهُ أَحَدٌ " .

**சஹல் இப்னு சஹத் (ரலி) - நபி (ஸல்) - சுவர்க்கத்தில் ரய்யான் என்ற ஒரு கதவு இருக்கிறது மறுமையில் நோன்பாளிகள் மட்டுமே அதில் நுழைவார்கள் அவர்களைத்தவிர வேறெவரும் அதில் நுழைய மாட்டார்கள், நோன்பாளிகள் எங்கே என்று கேட்கப்படும் அப்போது அவர்கள் அங்கே செல்வார்கள் அதன் பின் அங்கு யாரும் செல்ல மாட்டார்கள் அவர்கள் நுழைந்ததற்கு பின்னர் அது மூடப்பட்டு விடும் என்று கூறிவிட்டு பிறகு அதில் யாரும் செல்ல மாட்டார்கள் என்று 3 முறை கூறினார்கள்.**

 ومن صام رمضان إيمانا واحتسابا غفر له ما تقدم من ذنبه

**அபூஹுரைரா (ரலி) - நபி (ஸல்)- யார் ரமழானில் நோன்புநோற்று ஈமானோடும் கூலியை எதிர்பார்த்தும் வணங்குகிறாரோ அவருடைய முன் செய்த பாவங்களும் மன்னிக்கப்படும்(புஹாரி)**

1- فرض الصيام و فضله

## நோன்பின் சிறப்பும் அதன் கடமையும்

 عَنْ أَبِي هُرَيْرَةَ ، قَالَ : قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : " أَتَاكُمْ رَمَضَانُ شَهْرٌ مُبَارَكٌ ، فَرَضَ اللَّهُ عَزَّ وَجَلَّ عَلَيْكُمْ صِيَامَهُ ، تُفْتَحُ فِيهِ أَبْوَابُ السَّمَاءِ ، وَتُغْلَقُ فِيهِ أَبْوَابُ الْجَحِيمِ ، وَتُغَلُّ فِيهِ مَرَدَةُ الشَّيَاطِينِ لِلَّهِ ، فِيهِ لَيْلَةٌ خَيْرٌ مِنْ أَلْفِ شَهْرٍ ، مَنْ حُرِمَ خَيْرَهَا فَقَدْ حُرِمَ "

**அபூஹுரைரா (ரலி) - நபி (ஸல்) - உங்களிடம் ரமழான் வந்திருக்கிறது அது பரக்கத்தான மாதமாகும் அதில் உங்களுக்கு நோன்பை கடமையாக்கியிருக்கிறான். அந்த மாதத்தில் வானங்களின் கதவுகள் திறக்கப்படும், நரகத்தின் அனைத்து கதவுகளும் மூடப்படும், முரட்டுத்தனமான ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றன, அதில் அல்லாஹ்விற்கு ஒரு இரவு இருக்கிறது அது 1000 மாதங்களை விட சிறந்தது. யாருக்கு அந்த இரவின் நன்மை கிடைக்கவில்லையோ அவருக்கு எந்த நன்மையும் கிடைக்கவேயில்லை என்றாகிவிடும். (ஸுனன் நஸயீ)**

**இமாம்களின் விளக்கம் :**

**ஷைத்தான்கள் விலங்கிடப்படுகிறார்கள்**

- **தீமையின் வாயில்கள் மூடப்பட்டு நன்மையின் வாயில்கள் திறக்கப்படலாம்.**
- **பாவங்கள் செய்ய ஷைத்தான்கள் மட்டுமே காரணமல்ல மனிதர்களும் காரணம் தான்.**

2 - فضل شهر رمضان

## ரமழான் மாதத்தின் சிறப்பு

 إِذَا دَخَلَ رَمَضَانُ فُتِّحَتْ أَبْوَابُ الْجَنَّةِ وَغُلِّقَتْ أَبْوَابُ جَهَنَّمَ وَسُلْسِلَتْ الشَّيَاطِينُ

**அபூஹுரைரா (ரலி) - நபி (ஸல்) - ரமழான் நுழைந்து விட்டால் சுவர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்படும் நரகத்தின் வாசல்கள் மூடப்படும் ஷைத்தான்கள் விலங்கிடப்படுவார்கள்.**

 كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ أَجْوَدَ النَّاسِ بِالْخَيْرِ وَكَانَ أَجْوَدَ مَا يَكُونُ فِي شَهْرِ رَمَضَانَ إِنَّ جِبْرِيلَ عَلَيْهِ السَّلَام كَانَ يَلْقَاهُ فِي كُلِّ سَنَةٍ فِي رَمَضَانَ حَتَّى يَنْسَلِخَ فَيَعْرِضُ عَلَيْهِ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ الْقُرْآنَ فَإِذَا لَقِيَهُ جِبْرِيلُ كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ أَجْوَدَ بِالْخَيْرِ مِنْ الرِّيحِ الْمُرْسَلَةِ

**இப்னு அப்பாஸ் (ரலி) - நபி (ஸல்) பிறருக்கு நன்மை செய்வதில் மிகவும் வேகமானவர்களாக இருந்தார்கள். ரமழானில் நபி (ஸல்) மிகவும் தருமசாலியாக இருப்பார்கள் ஜிப்ராஈல் (அலை) அவர்களை சந்திக்கும் நாட்களில். ரமழானில் ஒவ்வொரு இரவிலும் ஜிப்ராஈல் (அலை) நபி (ஸல்) அவர்களை சந்திப்பார்கள். நபி (ஸல்) அவர்கள் ஜிப்ராஈல் (அலை) அவர்களிடம் குர்ஆனை ஓதிக்காட்டுவார்கள். ஆகவே**

**ஜிப்ராஈல் (அலை) அவர்களை சந்திக்கும் அந்த நாட்களில் வேகமாக வீசும் காற்றை விட தருமம் செய்பவர்களாக இருந்தார்கள்.**

 عَنْ كَعْبِ بْنِ عُجْرَةَ ، قَالَ : قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : " احْضُرُوا الْمِنْبَرَ " ، فَحَضَرْنَا ، فَلَمَّا ارْتَقَى دَرَجَةً ، قَالَ : " آمِينَ " ، فَلَمَّا ارْتَقَى الدَّرَجَةَ الثَّانِيَةَ ، قَالَ : " آمِينَ " ، فَلَمَّا ارْتَقَى الدَّرَجَةَ الثَّالِثَةَ ، قَالَ : " آمِينَ " ، فَلَمَّا فَرَغَ ، نَزَلَ عَنِ الْمِنْبَرِ ، قَالَ : فَقُلْنَا يَا رَسُولَ اللَّهِ ، لَقَدْ سَمِعْنَا الْيَوْمَ مِنْكَ شَيْئًا لَمْ نَكُنْ نَسْمَعُهُ ، قَالَ : " إِنَّ جِبْرِيلَ عَلَيْهِ السَّلامِ عَرَضَ لِي ، فَقَالَ : بَعُدَ مَنْ أَدْرَكَ رَمَضَانَ ، فَلَمْ يُغْفَرْ لَهُ ، فَقُلْتُ : آمِينَ ، فَلَمَّا رَقِيتُ الثَّانِيَةَ ، قَالَ : بَعُدَ مَنْ ذُكِرْتَ عِنْدَهُ ، فَلَمْ يُصَلِّ عَلَيْكَ ، فَقُلْتُ : آمِينَ ، فَلَمَّا رَقِيتُ الثَّالِثَةَ ، قَالَ : بَعُدَ مَنْ أَدْرَكَ وَالِدَيْهِ الْكِبَرَ عِنْدَهُ ، أَوْ أَحَدُهُمَا ، ثُمَّ لَمْ يُدْخِلاهُ الْجَنَّةَ ، أَظُنُّهُ قَالَ : فَقُلْتُ : آمِينَ

**கஹ்ப் இப்னு உஜ்ரா (ரலி) - ஒரு முறை நபி (ஸல்) எங்களை மிம்பரில் அருகில் வருமாறு கூறினார்கள் நாங்கள் சென்றோம் அப்போது நபி (ஸல்) ஒரு படியில் ஏறினார்கள் ஆமீன் என்றார்கள் பிறகு இரண்டாவது படியில் ஏறி ஆமீன் என்றார்கள் பிறகு மூன்றாவது படியில் ஏறி மீண்டும் ஆமீன் என்றார்கள். நபி (ஸல்) இறங்கியபோது நாங்கள் கேட்டோம் உங்களிடம் இப்போது கேட்டதுபோல் இதற்கு முன்னர் கேட்டதே இல்லையே என்று. அப்போது நபி (ஸல்) கூறினார்கள் "ஜிப்ராஈல் (அலை) அவர்கள் வந்தார்கள் மேலும் யார் ரமழானை அடைந்தும் பாவமன்னிப்பை பெறவில்லையே அவர்களுக்கு தூரம் உண்டாகட்டும் என்றபோது நான் ஆமீன் என்றேன் இரண்டாவது படியில் இருந்தபோது நபியே உங்களை ஞாபகப்படுத்தப்பட்டும் யாரொருவர் அந்நேரத்தில் உங்களுக்கு ஸலவாத் சொல்லவில்லையே அவருக்கு தூரம் உண்டாகட்டும் என்றார்கள் நான் ஆமீன் என்றேன் மூன்றாவது படியில் இருந்தபோது எவர் பெற்றோர்களில் ஒருவர் வயதான காலத்தை அடைந்து அதன் மூலம் சுவர்க்கம் செல்லவில்லையா அவருக்கும் தூரம் உண்டாகட்டும் என்றார்கள் நான் அமீன் என்றேன் எனக்கூறினார்கள் அதை கேட்ட நானும் ஆமீன் என்றேன். (ஹாகிம் - சில உலமாக்கள் இதை லயீப் என்றபோதிலும் இமாம் தஹபீ இதை ஸஹீஹ் என்கிறார்கள்)**

3 - صُومُوا لِرُؤْيَتِهِ ، وَأَفْطِرُوا لِرُؤْيَتِهِ

## பிறைப் பார்த்து நோன்பு வையுங்கள்

## பிறைப் பார்த்து நோன்பை விடுங்கள்

 أَنَّ عَبْدَ اللَّهِ بْنَ عُمَرَ قَالَ: سَمِعْتُ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ: «إِذَا رَأَيْتُمُوهُ فَصُومُوا , وَإِذَا رَأَيْتُمُوهُ فَأَفْطِرُوا , فَإِنْ غُمَّ عَلَيْكُمْ فَاقْدُرُوا لَهُ

**இப்னு உமர் (ரலி)  - நபி (ஸல்) - நீங்கள் பிறையைக்கண்டால் நோன்பு வையுங்கள் பிறையைக்கண்டால் நோன்பை விடுங்கள் உங்களுக்கு மேகமூட்டமாக இருந்தால் நீங்கள் கணித்துக்கொள்ளுங்கள்.(புஹாரி)**

 صُومُوا لِرُؤْيَتِهِ وَأَفْطِرُوا لِرُؤْيَتِهِ، فَإِنْ غُبِّيَ عَلَيْكُمْ: فَأَكْمِلُوا عِدَّةَ شَعْبَانَ ثَلَاثِينَ

**அபூஹுரைரா (ரலி) - நபி (ஸல்) - நீங்கள் பிறையைப்பார்த்து நோன்பை வையுங்கள், பிறையை பார்த்தே நோன்பை விடுங்கள் மேகமூட்டத்தின் காரணத்தால் பிறை தெரியவில்லையென்றால் ஷஃபானை 30 ஆகா பூர்த்தி செய்து கொள்ளுங்கள். (புஹாரி)**

□ قول ابن مسعود : ( صمنا مع النبي صلى الله عليه وآله وسلم تسعا وعشرين أكثر مما صمنا ثلاثين

**அப்துல்லாஹ் இப்னு மசூத் (ரலி) - நாங்கள் நபி (ஸல்) உடன் இருந்த காலத்தில் 30 நோன்புகள் பிடித்ததை விட 29 நோன்புகள் பிடித்தது தான் அதிகம் (அபூதாவூத்)**

□ عَنْ رِبْعِيِّ بْنِ حِرَاشٍ ، عَنْ رَجُلٍ مِنْ أَصْحَابِ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ ، قَالَ : " اخْتَلَفَ النَّاسُ فِي آخِرِ يَوْمٍ مِنْ رَمَضَانَ ، فَقَدِمَ أَعْرَابِيَّانِ فَشَهِدَا عِنْدَ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ ، بِاللَّهِ بإهَلال الْهِلالَ أَمْسِ عَشِيَّةً ، فَأَمَرَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ النَّاسَ أَنْ يُفْطِرُوا " . زَادَ خَلَفُ بْنُ هِشَامٍ : وَأَنْ يَغْدُوا إِلَى مُصَلاهُمْ ، قُلْتُ : قَوْلُهُ : وَأَنْ يَغْدُو إِلَى مُصَلاهُمْ ،

**ரிப்ஹீ இப்னு ஹிராஷ் - ரமழானின் கடைசி நாளில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது அப்போது 2 கிராமவாசிகள் வந்து நபி (ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வைக்கொண்டு சாட்சி கூறி முந்திய நாள் பிறை பார்த்ததாக சாட்சி கூறினார்கள் அப்போது நபி (ஸல்) மக்களிடம் நோன்பு திறக்குமாறு கட்டளையிட்டார்கள்.**

**{நபி (ஸல்) நோன்பை விட்டுவிட்டு தொழுமிடத்திற்கு செல்லுமாறு கட்டளையிட்டதாக ஒரு அறிவிப்பாளர் கூடுதலாக அறிவிக்கிறார்}**

4 - لكل بلد رؤية

## ஒவ்வொரு ஊராருக்கும் அவர்அவரின் பிறை பார்த்தல்(ஸஹீஹ் முஸ்லீம்)

□ عَنْ كُرَيْبٍ، أَنَّ أُمَّ الْفَضْلِ بِنْتَ الْحَارِثِ، بَعَثَتْهُ إِلَى مُعَاوِيَةَ بِالشَّامِ، قَالَ: فَقَدِمْتُ الشَّامَ، فَقَضَيْتُ حَاجَتَهَا، وَاسْتُهِلَّ عَلَيَّ رَمَضَانُ وَأَنَا بِالشَّامِ، فَرَأَيْتُ الْهِلَالَ لَيْلَةَ الْجُمُعَةِ، ثُمَّ قَدِمْتُ الْمَدِينَةَ فِي آخِرِ الشَّهْرِ، فَسَأَلَنِي عَبْدُ اللهِ بْنُ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا، ثُمَّ ذَكَرَ الْهِلَالَ فَقَالَ: مَتَى رَأَيْتُمُ الْهِلَالَ؟ فَقُلْتُ: رَأَيْنَاهُ لَيْلَةَ الْجُمُعَةِ، فَقَالَ: أَنْتَ رَأَيْتَهُ؟ فَقُلْتُ: نَعَمْ، وَرَآهُ النَّاسُ، وَصَامُوا وَصَامَ مُعَاوِيَةُ، فَقَالَ: " لَكِنَّا رَأَيْنَاهُ لَيْلَةَ السَّبْتِ، فَلَا نَزَالُ نَصُومُ حَتَّى نُكْمِلَ ثَلَاثِينَ، أَوْ نَرَاهُ، فَقُلْتُ: أَوَ لَا تَكْتَفِي بِرُؤْيَةِ مُعَاوِيَةَ وَصِيَامِهِ؟ فَقَالَ: لَا، هَكَذَا أَمَرَنَا رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ " وَشَكَّ يَحْيَى بْنُ يَحْيَى فِي نَكْتَفِي أَوْ تَكْتَفِي

**குறைப் - ஹாலித் அவர்களின் மகள் உம்முல் ஃபள்ல் அவர்கள் என்னை (குறைபை) ஷாமில் உள்ள முஆவியா (ரலி) அவர்களிடம் அனுப்பியபோது தேவைகளை முடித்தபின் ஜும்மாவுடைய இரவில் பிறையைக்கண்டேன் பிறகு நான் மதினாவிற்கு ரமழானின் கடைசியில் வந்தேன் அப்போது அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) என்னை விசாரித்தார்கள் அப்போது பிறை சம்மந்தமான பேச்சு வந்தது அப்போது நீங்கள் எப்போது பிறையை கண்டீர்கள் என்று கேட்டார்கள் நான் ஜும்மா இரவில் என்றபோது நீங்கள் கண்டீர்களா என்று கேட்டார்கள் நானும் கண்டேன் மக்களும் கண்டார்கள். மக்களும் முஆவியா (ரலி) அவர்களும் நோன்பு வைத்தார்கள் என்றேன். அப்போது அப்துல்லாஹ்**

**இப்னு அப்பாஸ் (ரலி) - நாங்கள் சனிக்கிழமை இரவு தான் பிறையைக்கண்டோம் ஆகவே நாங்கள் நோன்பை 30 ஆகா முடித்துக்கொள்வோம் பிறையை காணாதவரை என்றார்கள். அப்போது நான் முஆவியா (ரலி) பிறையைக் கண்டது உங்களுக்கு போதாதா என்று கேட்டேன் அப்போது அப்துல்லாஹ் (ரலி) - இல்லை இவ்வாறு தான் நபி (ஸல்) எங்களுக்கு ஏவியுள்ளார்கள் என பதிலளித்தார்கள்.(ஸஹீஹ் முஸ்லீம்)**

5 - باب شهرا عيد لا ينقصان

## பெருநாளின் 2 மாதங்களும் குறையுள்ளதல்ல

عبد الرحمن بن أبي بكرة عن أبيه رضي الله عنه عن النبي صلى الله عليه وسلم قال شهران لا ينقصان شهرا عيد رمضان وذو الحجة

**அபூபக்ரா (ரலி) - நபி (ஸல்) - இரண்டு மாதங்கள் என்றைக்கும் குறையாது - துல் ஹிஜ்ஜா வும் ரமழானும்**

**விளக்கம்:**

**29 நோன்புகள் மட்டுமே கிடைத்தாலும் கூலி பூரணமாக கிடைக்கும்**

6 - باب بدا الصوم من الفجر

## ஃபஜ்ரிலிருந்து நோன்பு ஆரம்பம்

عن عدي بن حاتم رضي الله عنه قال لما نزلت حتى يتبين لكم الخيط الأبيض من الخيط الأسود عمدت إلى عقال أسود وإلى عقال أبيض فجعلتهما تحت وسادتي فجعلت أنظر في الليل فلا يستبين لي فغدوت على رسول الله صلى الله عليه وسلم فذكرت له ذلك فقال إنما ذلك سواد الليل وبياض النهار

**அதீ இப்னு ஹாதிம் (ரலி) -** حتى يتبين لكم الخيط الأبيض من الخيط الأسود **2:187 ஆவது வசனம் இறங்கியபோது நான் என்னுடைய தலையணையின் கீழ் கருப்பு நூலும் வெள்ளை நூலையும் வைத்தேன் அதைப்பார்த்துக்கொண்டே இருந்தேன் ஆனால் எனக்கு அதில் எந்த வித்தியாசமும் தெரியவே இல்லை அப்போது நான் நபி (ஸல்) அவர்களிடம் அதைப்பற்றி சொன்னேன் அப்போது நபி (ஸல்) இது பகலுடைய வெண்மையும் இருளின் கருமையையும் குறிக்கிறது என்று விளக்கமளித்தார்கள்.(புஹாரி)**

إِنَّ بِلالا يُؤَذِّنُ بِلَيْلٍ فَكُلُوا وَاشْرَبُوا حَتَّى يُؤَذِّنَ ابْنُ أُمِّ مَكْتُومٍ

**ஆயிஷா (ரலி) - நபி (ஸல்)- நீங்கள் பிலாலின் பாங்கு சப்தத்தை கேட்டால் உண்ணுங்கள் பருகுங்கள் இப்னு உம்மி மக்தூமின் பாங்கு சப்தம் கேட்டால் நிறுத்திவிடுங்கள். (புஹாரி)**

7 - متى يفطر الصائم

## எப்பொழுது நோன்பு திறக்க வேண்டும்?

إِذَا أَقْبَلَ اللَّيْلُ مِنْ هَاهُنَا ، وَأَدْبَرَ النَّهَارُ مِنْ هَاهُنَا ، وَغَرَبَتِ الشَّمْسُ ، فَقَدْ أَفْطَرَ الصَّائِمُ

**உமர் (ரலி)- இங்கிருந்து இரவு வர ஆரம்பித்தால் மேலும் இங்கிருந்து பகல் போக ஆரம்பித்தால் சூரியனும் மறைந்து விட்டால் நோன்பாளி நோன்பு திறக்கும் நேரம் வந்துவிட்டது (புஹாரி)**

8 - استحباب السحور وتأخيره

## ஸஹரை பிற்படுத்துவது சிறந்தது

□ عن أَنَسِ بْنِ مَالِكٍ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ قَالَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : " تَسَحَّرُوا فَإِنَّ فِي السَّحُورِ بَرَكَةً

**அனஸ் இப்னு மாலிக் (ரலி) - நபி (ஸல்) - ஸஹர் செய்யுங்கள் நிச்சயமாக ஸஹரில் பரக்கத் இருக்கிறது.**

□ عن سهل بن سعد رضي الله عنه قال كنت أتسحر في أهلي ثم تكون سرعتي أن أدرك صلاة الفجر مع رسول الله صلى الله عليه وسلم

**சஹல் இப்னு சஹத் (ரலி) - நபி (ஸல்) - நான் என்னுடைய குடும்பத்தில் ஸஹர் செய்வேன் பின்னர் நபி (ஸல்) அவர்களுடன் ஃபஜ்ர்(தொழுகை) செய்வதற்காக விரைந்து செல்வேன்(புஹாரி)**

□ إِنَّا مَعَاشِرَ الأَنْبِيَاءِ أُمِرْنَا أَنْ نُعَجِّلَ فِطْرَنَا ، وَأَنْ نُؤَخِّرَ سَحُورَنَا ، وَأَنْ نمسك بِأَيْمَانِنَا عَلَى شَمَائِلِنَا فِي الصَّلاةِ

**இப்னு அப்பாஸ் (ரலி) - நபி (ஸல்) - நாங்கள் நபிமார்கள் எங்களுடைய ஸஹர்களை பிற்படுத்துமாறும் நோன்பு திறத்தலை அவசரப்படுத்துமாறும் நாங்கள் ஏவப்பட்டோம் மேலும் எங்கள் தொழுகைகளில் வலதினால் இடதை பிடிக்குமாறும் ஏவப்பட்டோம்.(அஹ்மத் - இமாம் முஸ்லிமின் நிபந்தனையின் அடிப்படையில் இது ஸஹீஹ் என்று கூறப்படுகிறது)**

9 - باب استحباب تعجيل الفطر

## நோன்பு திறத்தலை முற்படுத்தல்

□ عَنْ سَهْلِ بْنِ سَعْدٍ أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : " لا يَزَالُ النَّاسُ بِخَيْرٍ مَا عَجَّلُوا الْفِطْرَ

**சஹல் இப்னு சஹத் (ரலி) - நபி (ஸல்) - நோன்புத்திறத்தலை அவசரப்படுத்தும் காலமெல்லாம் மக்கள் நலவிலே இருப்பார்கள் (புஹாரி)**

□ عَنْ سَهْلِ بْنِ سَعْدٍ ، قَالَ : قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ : " لا تَزَالُ أُمَّتِي عَلَى سُنَّتِي مَا لَمْ تَنْتَظِرْ بِفِطْرِهَا النُّجُومَ " ، قَالَ : وَكَانَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ إِذَا كَانَ صَائِمًا أَمَرَ رَجُلا فَأَوْفِي عَلَى شَيْءٍ ، فَإِذَا قَالَ : " غَابَتِ الشَّمْسُ " ، أَفْطَرَ

**சஹல் இப்னு சஹத் (ரலி) - என்னுடைய உம்மத் என்னுடைய சுன்னத்திலேயே இருந்து கொண்டிருக்கும் நோன்பு திறப்பதற்கு நட்சத்திரங்களை எதிர்ப்பார்க்காத காலம் வரை. மேலும் சஹல் (ரலி) கூறினார்கள் நபி (ஸல்) நோன்பாளியாக இருந்தால் ஒரு மனிதனுக்கு கட்டளையிடுவார்கள் எதிலாவது ஏறிப்பார்த்து சூரியன் மறைந்து விட்டதென்று அறிவித்தால் நோன்பை திறப்பார்கள்.**

10 - باب من اكل ناسيا

## மறந்து சாப்பிட்டு விட்டால்

 عن أبي هريرة رضي الله تعالى عنه قال: قال النبي صلى الله عليه وسلم: "مَن أكل ناسيًا وهو صائمٌ فليُتِمَّ صومَه، فإنما أطعمه الله وسقاه

**அபூ ஹுரைரா (ரலி) - நபி (ஸல்) - யார் நோன்பாளியாயிருந்தும் மறந்து சாப்பிட்டுவிடுகிறாரோ அவர் தனது நோன்பை பூர்த்தி செய்து கொள்ளட்டும்.அவருக்கு உணவு கொடுத்ததும் நீர் கொடுத்ததும் அல்லாஹ் தான். (புஹாரி)**

 من أفطر في رمضان ناسياً فلا قضاء عليه ولا كفارة

**அபூஹுரைரா (ரலி) - நபி (ஸல்) - எவரேனும் ரமழானில் மறதியில் நோன்பு திறந்து விட்டால் அவர் அதை களா வீட்டவும் தேவையில்லை அதற்கு எந்த பரிகாரமும் இல்லை (இப்னு மாஜா - இது ஹஸனான இஸ்னாதுடன் இருந்தாலும் கருத்து முரண்பாடுள்ள செய்தியாகும்)**

11- باب لا يتقدم رمضان بصوم

## ரமழானுக்கு முந்திய நாள் நோன்பு வைக்கக்கூடாது

 عن أبي هريرة رضي الله عنه عن النبي صلى الله عليه وسلم قال لا يتقدمن أحدكم رمضان بصوم يوم أو يومين إلا أن يكون رجل كان يصوم صومه فليصم ذلك اليوم

**அபூஹுரைரா (ரலி) - நபி (ஸல்) - யாரும் ரமழானை ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு முந்திக்கொள்ள வேண்டாம். ஆனால் தொடர்ந்து நோன்பு பிடிப்பவர் அந்த நாளை அடைந்தால் அவர் நோற்றுக்கொள்ளட்டும்.**

12 - باب النهي عن الوصال

## தொடர் நோன்பு வைத்தல்

 أن أبا هريرة قال نهى رسول الله صلى الله عليه وسلم عن الوصال قالوا فإنك تواصل قال أيكم مثلي إني أبيت يطعمني ربي ويسقين فلما أبوا أن ينتهوا واصل بهم يوما ثم يوما ثم رأوا الهلال فقال لو تأخر لزدتكم كالمنكل لهم

**அபூஹுரைரா (ரலி) - நபி (ஸல்) அவர்கள் தொடர் நோன்பை(நோன்பு திறக்காமல் அடுத்த நாள் நோன்பை தொடர்வது) தடுத்தார்கள். அப்போது நீங்கள் அவ்வாறு நோன்பு பிடிக்கிறீர்கள் யா ரசூலுல்லாஹ் என்று கேட்டபோது நபி (ஸல்) அவர்கள் உங்களில் யார் என்னைப்போல இருக்கிறீர்கள்?, என்னுடைய இறைவன் எனக்கு உணவளிக்கிறான் குடிக்க வைக்கிறான் என்றபோதிலும் அவர்கள் நாங்களும் அதே போல நோன்பு வைக்க வேண்டும் என்று விரும்பியபோது அடுத்த நாள் நோன்பையும் முறிக்காமல் நபி (ஸல்) தொடர்ந்தார்கள் பிறகு பிறையைக் கண்டார்கள் அப்போது நபி (ஸல்) இந்த பிறையை மட்டும் காணவில்லையென்றால் நான் இன்றும் நோன்பை முறித்திருக்க மாட்டேன் என நபி (ஸல்) கூறினார்கள்.**

13 - باب الوصال إلى السحر

## ஸஹர் வரை நோன்பை தொடரலாம்

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ ، أَنَّهُ سَمِعَ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ ، يَقُولُ : " لا تُوَاصِلُوا ، فَأَيُّكُمْ أَرَادَ أَنْ يُوَاصِلَ فَلْيُوَاصِلْ حَتَّى السَّحَرِ . قَالُوا : يَا رَسُولَ اللَّهِ إِنَّكَ تُوَاصِلُ ، قَالَ : إِنِّي لَسْتُ كَهَيْئَتِكُمْ إِنِّي أَبِيتُ لِي مُطْعِمٌ يُطْعِمُنِي ، وَسَاقٍ يَسْقِينِي

**அபூஸயீது அல் ஹுத்ரீ (ரலி) - நபி (ஸல்) - நீங்கள் தொடர்ந்து நோன்பு பிடிக்க வேண்டாம் உங்களில் எவரேனும் தொடர விரும்பினால் ஸஹர் வரை தொடருங்கள். நீங்கள் தொடர்நோன்பு வைக்கிறீர்களே யா ரசூலுல்லாஹ் என்று கேட்டபோது நபி (ஸல்) அவர்கள் நான் உங்களைப்போன்றவனல்ல எனக்கு உணவளிக்கக்கூடிய நீர் புகட்டக்கூடியவன் இருக்கிறான் என்றார்கள். (புஹாரி)**